Registered as a News-
paper in Ceylon
P. M. G. NO. H. A.
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு௵ ஆனிமீ ௩௧௨ (1943 ஜுலைமீ 15 வியாழக்கிழமை) [இல. உ௮

## சிங்கப்பூரிலுள்ள பொது ஜனங்கள்

### மற்றுஞ்சில நாமாவலிகள் வந்திருக்கின்றன

சிங்கப்பூரைச் சேர்ந்த சாங்கி முகாமில் ஜப்பானியரால் பாதுகாப்பில் வைக்கப்பட்ட பொதுஜனங்களின் பெயர்களடங்கிய மற்றுஞ் சில நாமாவலிகள் குடியேற்றநாட்டு மந்திரியிடமிருந்து மேன்மைதங்கிய தேசாதிபதிக்குக் கிடைத்திருக்கின்றன. ஏறக்குறைய 1780 பெயர்களுள்ள இந்த நாமாவலிகளை விளம்பரப்பகுதிக் காரியாலயத்திற் பொதுஜனங்கள் பார்வையிடலாம்.

## இலங்கைக்குப் பட்டு ஏற்றுமதி

பம்பாய் யூலை 8

இலங்கைக்கு எல்லாவிதமான பட்டுப் புடைவைகள் வஸ்திரங்களை யனுப்ப அனுமதி வேண்டுமென அகில இந்திய முஸ்லிம் வர்த்தகர் சங்கம் கோரியதற்கு 1941-42ம் வருடத்தில் அனுப்பப்பட்ட மொத்த ஏற்றுமதியில் இருபது சத விகிதம் லைராட்டைப் பட்டுநூலான பனாரிஸ் பட்டுப் புடைவைகளைத் தபால்மூலம் அனுப்ப இந்திய அரசாங்கத்தார் அனுமதியளிக்கத் தீர்மானித்துள்ளனர்.

இதராக பட்டுத்துணிகள் சம்பந்தமாக இச்சலுகை காட்டமுடியாதென இந்திய அரசாங்கத்தார் வருத்தந் தெரிவித்துள்ளனர்.

## 2 வயதுச் சிறுமியின் பரிதாப மரணம்

வள்ளியம்மை என்னும் இரண்டு வயதுச்சிறுமி சென்ற சனிக்கிழமை அடுப்பில் விழுந்ததன் விளைவாகப் பலத்த தீப்புண்களடைந்து கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் மரணமானாள். தீப்புண்களால் அதிர்ச்சியடைந்து மரணமேற்பட்டதென்று விசாரணையில் தீர்ப்பளிக்கப்பட்டது.

## பண்ணைக்கு இடைவெளியுடன் பாலம்

### ஆடு பாலத்தைப் பின்னர் அமைக்கத் தீர்மானம்

போக்குவரத்து நிர்வாகசபை சென்ற செவ்வாய்க்கிழமை கூடிய பொழுது பண்ணைக்கும் அல்லைப்பிட்டிக்குமிடையே பாலமொன்றை அமைக்கும் ஆலோசனையை ஏற்றுக்கொண்டது.

படகுகளும் பெரிய பாய்க்கப்பல்களும் செல்லுவதற்கு இடைவெளிவிட்டு ஒரு பாலத்தை அமைக்குந் திட்டத்தையே காரிய நிர்வாகசபை தெரிவு செய்தது. குறித்த இடைவெளியில் ஆடுபாலத்தை அமைக்கும் வேலையைப் பின்னர் ஆரம்பிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இப்பாலத்தை அமைத்து முடிக்க மூன்றுவருஷ காலம் செல்லுமென்றும் கருதப்படுகிறது.

# சிங்கப்பூரில் சுபாஷ் சந்திர போஸ்

## ஜப்பானுடன் நாஜி நீர்மூழ்கிப் போக்குவரத்து

சுங்கிங் ஜுலை 7—

ஜெர்மனியிலிருந்து ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் சிங்கப்பூருக்கு வந்திருக்கிறார். நெடுநாளாக ஜெர்மனிக்கும் ஜப்பானுக்குமிடையில் முக்கியமான மூலப்பொருள் பரிவர்த்தனையும் தொழில் நிபுணர்கள் பரிவர்த்தனையும் சாமான்களை ஏற்றிச் செல்லும் பெரிய சப்மரீன் போக்குவரத்தும் நடைபெறுவது இதனால் முன்னிலும் நன்றாகக் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

முன்பு இந்தப் பரிவர்த்தனைகள் மடகாஸ்கரில் நடைபெற்று வந்ததாகவும் ஆனால் தற்போது பெரிய ஜெர்மன் சப்மரீன்கள் நேராகச்சிங்கப்பூருக்குப் போவதாகவும் தெரிகிறது. நம்பத்தகுந்த சீன அறிக்கைகளிலிருந்து ஜெர்மன் தொழில் நிபுணர்கள் ஜப்பானுக்கு ஜப்பானிய விமான உற்பத்தித்தொழிலை விருத்தி செய்வதற்காக வந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதற்குப் பதிலாக ஜப்பானியர் ஜெர்மனியருக்குக் குரோமியம் அன்டிமனி இயம் றப்பர் டங்ஸ்டென் ஆகிய மூலப்பொருள்களைப் பதிலுக்கு 'சப்ளை' செய்கிறார்கள்.

### டோக்கியோவில் சுபாஷ் போஸ்

சுபாஷ் சந்திரபோஸ் விஷயத்தில் ஜனங்களின் கவனம் குறையாமல் இருப்பதற்காக எதிரியின் முயற்சிகள் விடாமல் நடந்து வருகின்றன. சென்ற வருஷம் ஏப்ரல் மாதத்தில் இவரை கிரிப்ஸுக்குப் போட்டியாய் வேலைசெய்பவரென்று அச்சு ரேடியோக்கள் அறிவித்தது ஞாபகமிருக்கலாம். இந்தியா பிரிட்டனுடன் சமரசம் செய்துகொண்டால் இந்தியாவின் மீது ஜப்பானியர் குண்டுகளைப் பொழிந்து தள்ளிவிடுவார்கள் என்று அப்பொழுது டோக்கியோ ரேடியோ அறிவித்தது. பின்பு சிலகாலவரை அவரைப்பற்றிப் பேச்சேயில்லை. அதன் பிறகு அவர் இறந்துவிட்டதாக ஜெர்மன் ரேடியோ ஒரு பெரிய வதந்தியைக் கிளப்பிவிட்டு இந்தியத் தலைவர்களின் ராஜீய உணர்ச்சிகளையும் அந்தரங்க அனுதாபத்தையும் கிளறிவிடவெத்தனித்தது.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## இலங்கையின் எதிர்கால அரசியலமைப்பு

லண்டன், ஜுலை, 13—

இன்று கொம்மன்ஸ் சபையிற் பிருத்தானிய குடியேற்ற நாட்டுக் கொள்கைபற்றி விவாதிக்கப்படும்போது, யுத்தம் முடிந்ததும் இலங்கையிற் கூடியவிரைவில் உள்நாட்டுச் சுயஆட்சி ஏற்படவேண்டுமென்று பிருத்தானிய அரசாங்கம் விரும்புவது மீண்டும் வற்புறுத்தப்பட்டது.

குடியேற்றநாட்டு மந்திரி மிஸ்றர் ஒலிவர் ஸ்டான்லி ஜமெய்க்காவுக்கான புதிய அரசியலமைப்புப் பற்றிப் பிரஸ்தாபித்துவிட்டுக் கூறியதாவது:—

இலங்கைக்கு உள்நாட்டுச் சிவில் விஷயங்களில பிருத்தானிய முடியின்கீழ்ப் பூரணசுயாட்சி வழங்க வாக்குறுதியளிக்கப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## சர்வகலாசாலையில் 225 புதிய மாணவர்கள்

நீண்ட விடுமுறையின் பின்னர் இலங்கைச் சர்வகலாசாலையின் புதுவருட வேலை இன்று ஆரம்பமாகும்.

புதிதாகச் சேர்ந்திருக்கும் 225 மாணவருடன் 900 பேருக்கதிகமாகச் சர்வகலாசாலையிலும் வைத்தியப் பிரிவிலும் இப்பொழுது உளர்.

சென்ற திங்களன்று சர்வகலாசாலைச் சபை கூடியபொழுது, ஹைதராபாத்தில் நடைபெறவிருக்கும் அகில இந்திய சர்வகலா சாலைகள் மகாநாட்டுக்கு இலங்கைச் சர்வகலா சாலை [illegible]

யாகச் செல்லவேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டது.

புத்தகசாலையின் சரித்திரப் பிரிவை விருத்தி செய்வதைச் சபை அங்கீகரித்தது.

சமீபத்தில் நடைபெற்ற சர்வகலாசாலைப் பிரவேசப் பரீட்சை பற்றிய அறிக்கையொன்று வியாழக்கிழமை நடைபெற்ற செனேற் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

## நெல் வாங்குந் திட்டம்

### முறைப்பாடுகளை விசாரிக்க உப நிர்வாகசபை

உள்நாட்டு நெல்வாங்குந் திட்டத்தின் காரணமாக மட்டக்களப்பு முதலிய இடங்களிலுள்ள விவசாயிகளுக்குப் பெருங் கஷ்டம் ஏற்பட்டிருப்பதாக முறைப்பாடுகள் வந்திருப்பதால் விவசாய நிர்வாகசபை குறித்த திட்டம் எவ்வாறு வேலை செய்கிறதென்று அறிய விசாரணையொன்று நடத்துவதென்று சென்ற செவ்வாய்க்கிழமைகாலை முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. விசாரணை நடத்துவதற்காக நிர்வாகசபையின் சில அங்கத்தவர்கள் கொண்ட ஓர் உப நிர்வாகசபை நியமிக்கப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது.

அரசாங்கச் சார்பில் நெல் வாங்குவதிற் கையாளப்படும் முறைகளைப் பற்றியும் அவைகளால் விவசாயிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களையும் திரு. எஸ். இராசரத்தினம் விவசாய மந்திரிக்கு மிகவும் எடுத்துரைத்திருக்கிறார்.

## பட்டினசபையின் புதிய உபதலைவர்

### தலைவரின் விசேஷ வாக்கால் தெரிவு

யாழ்ப்பாணம் யூலை 10—

யாழ்ப்பாணப்பட்டினசபை நேற்றுப் பிற்பகல் கூடியபொழுது திரு. வி. சுப்பையாவின் ஸ்தானத்திற்குப் புதிய உபதலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும் பிரச்னை ஆலோசிக்கப்பட்டது.

திரு. சுப்பையாவையே உபதலைவராகத் தெரிவுசெய்யவேண்டுமென்று காதி எஸ். எம். அபூபக்கர் பிரேரித்தார்.

இதுவரை உபதலைவர்களாகவிருக்கும் சந்தர்ப்பமில்லாத மற்றும் அங்கத்தினருக்கு வசதியளிக்கும் பொருட்டுத் திரு. சுப்பையா தேர்தலில் போட்டியிட மறுத்தார்.

பின்னர்த் திரு. ஆரிய பத்திரானவை உபதலைவராகத் தெரிவு செய்யவேண்டுமென்று டக்டர். வி. எஸ். இராமநாதன் பிரேரிக்கத் திரு. வி. சுப்பையா அப்பிரேரணையை ஆமோதித்தார்.

செவாலியர் எஸ். அருளானந்தத்தை உபதலைவராகத் தெரிவுசெய்ய வேண்டுமென்னும் பிரேரணை திரு. ஆர். ஆர். நல்லையாவாற் கொண்டு வரப்பட்டு திரு. எம். சின்னத்துரையால் ஆமோதிக்கப்பட்டது.

பின்னர்ப் பிரேரணை வாக்குக்கு விடப்பட்டபொழுது திரு. பத்திரானவுக்கும் திரு. அருளானந்தத்திற்கும் சமமான ஐந்து வாக்குகள் கிடைத்தன.

இறுதியில் தலைவர் திரு. க. ஐயாத்துரை தமது விசேஷ வாக்கைத் திரு. அருளானந்தத்திற்கு அளிக்கவே, இவ்வங்கத்தவர் உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## நாவற்காட்டுக் கொலை வழக்கில் எதிரிகள்விடுதலை

யாழ்ப்பாணம் யூலை—

எஸ். கனகர் கே. செல்லையா ஏ. கந்தையா என்னும் மூவர் சென்ற வருடம் நவம்பர் மாதம் முதல்தேதி சாவகச்சேரியைச் சேர்ந்த நாவற்காட்டில் பொன்னம்பலம் என்னுமொருவரைத் தடிகளால் தாக்கிக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணச்சுப்பிறீங்கோட்டு விசாரணை ஆரம்பமானபொழுது நீதிபதி மிஸ்டர். ஜயத்திலகா முன்னிலையில் விசாரிக்கப்பட்டது.

நான்கு தினங்கள்வரை நடைபெற்ற விசாரணையின் பின், எதிரிகளனைவரும் நிரபராதிகளென யூரர்கள் ஏகமனதாகத் தீர்ப்புக் கூறினர். எதிரிகள் நிரபராதிகளெனக் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

ஆக, மொத்தம் 11 வழக்குகள் விசாரணைக்குக் குறிப்பிடப்பட்டிருந்தமையால், குறித்த சுப்பிறீங் கோட்டு விசாரணை முடிவுபெற இரண்டுமாதகாலமாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானு௵
ஆனிமீ ௩௧௨ வியாழக்கிழமை

## சிஸிலி யுத்தம்

ஐக்கிய தத்துவ ராச்சியத்தினர் சிஸிலியில் யுத்தந் தொடங்கி மூன்று நான்கு நாட்களாயின; இந்த யுத்த முனையே, ஐக்கிய தத்துவ ராச்சியத்தினர் நீடித்த காலமாக யோசித்து அற்றம் பார்த்துச் சமரில் இறங்குதற்கு இடமாகவிருந்த இரண்டாம் யுத்தமுனையாகும்; இச்சிஸிலி யுத்தம் இப்பொழுது வெகு கோரமாக நடைபெறுகிறது. ஆரம்பத்திலே எங்கள் ஐக்கிய தத்துவ ராச்சியத்தினரே ஜயம் பெற்றுவருவதாகத் தெரிகிறது. ஐக்கிய சைநியம் சிஸிலியிற் பகைவருக்குரிய மூன்று ஆகாயப்படைத் தானங்களையும் அத்தீவின் கரைப்புறத்துச் சில தரைப்பாகத்தையும் கைப்பற்றலாயின; இந்தச் சமாசாரம் எங்களெல்லோர்க்கும் மகிழ்ச்சிக்குரியதாகும்; ஆனால், யுத்தம் இதுபோல இன்னமும் இலகுவாக இருக்குமென ஐக்கிய தத்துவ ராச்சியத்தினரும் நினைக்கமாட்டார்கள், நாங்களும் அப்படி எண்ணிக் கொள்ள வொண்ணுது.

ஐக்கிய தத்துவ ராச்சியத்தினர் அயிரோப்பாக் கண்டத்தைச் சிஸிலி மூலமாகவே தாக்குவரெனப் பகைவர் முந்தியே யுணர்ந்திருந்தனரேனும், அவர்களுடைய, அவர்களுள்ளும்ஜர்மனியருடைய சைநியம் அந்த நேரத்தில் அதிகமாகச் சிஸிலியில் இருந்ததில்லையென்பதும் இவர்கள் தாக்கத்தொடங்கிய பின்புதான் அவைகள் பெருந்தொகையாக வருகின்றனவென்பதும் இப்பொழுது வெளிவரும் யுத்த தந்திச் சமாசாரங்களைக்கொண்டு யூகிக்கக் கிடக்கின்றன.

ஜர்மனிய படைகளும் தாங்கிகளும் யுத்த உபகரணங்களும் பெருந்தொகையாக இடையீடின்றிச் சிஸிலி யுத்த முனைக்கு இந்நாட்களில் வந்து சேருகின்றனவாம். இத்தலியரும் சகல ஆயத்தங்களோடும் படைவலி அரணவலிகளோடும், தம் நாட்டிற்குப் படையெடுத்து வந்தவருடன் சமர்செய்யத் தலைப்பட்டு நிற்கின்றனராம்; இந்த இரண்டாம் முனை யுத்த ஆரம்பங் காரணமாக, ஜர்மனியர் தாம் ருஷியருடன் செய்யும் யுத்தத்திலே சோர்வடைவரோ என்பதை இப்பொழுது சொல்லிக்கொள்ளுதல் முடியாதென யுத்த தந்திரிகள் தாமுஞ் சந்தேகங் கொள்கிறார்கள். ருஷியாவிலே குறுஸ்க் பகுதியில், ருஷியருக்கும் ஜர்மனியருக்குமிடையே இப்பொழுது நடக்கும் கோரமான யுத்தத்தில், ஜர்மனிய சேனுபதியாகிய வொன்குனுக்கி இன்னமும் பெருந்தொகையான ஜர்மனிய சைநியத்தை அந்த யுத்த முனையில் தருவித்துப் பகைவருடன் சமர்புரிந்து நிற்பதாகச் சொல்லப்படுகின்றது. குறித்த யுத்தத்திலே ஜர்மனியருக்குப் பலவகையான சேதம் நேரவும் அவர்கள் பின்வாங்காது சண்டை செய்கின்றார்களாம்; ஆனதால் இந்த யுத்தம் இப்போதைக்கு ருஷியயுத்தத்தில் ஜர்மனியரைச் சோர்வுபடச் செய்யாதொழியினும் காலகதியிற் சோர்வுபடச் செய்யுமென நாம் காத்திருக்கலாம்.

இப்பொழுது பிந்தி வந்துள்ள தந்திச் சமாசாரங்களை யோசிக்குமிடத்து ஐக்கிய தத்துவ ராச்சியத்தினரின் சைநியம் சிஸிலியில் முற்பட்டுச் சென்று சில பிரதான ஸ்தானங்களையும் கைப்பற்றிவிட்டதாக எண்ணக்கிடக்கின்றது. ஐக்கிய படையைச் சேர்ந்த கனடிய சைநியம் சிஸிலியின் கரையில் இஸ்பிக்கா, ரேஸொலினியென்னும் இரு பிரதான தானங்களைக் கைப்பற்றிவிட்டனவாம். என்றிக்கோவிறுன் ஸிஸியென்னும் இத்தலிய சேனுபதி இப்பொழுது சிஸிலியில் நடக்கும யுத்தத்தில் மாண்டுபோனதாகச் சமாசாரம் பிறந்திருக்கிறது. சிஸிலியின் தென்கிழக்குத் திசையில் அமெரிக்கபடை போய் இறங்குகின்றதென்றும் அங்குள்ள பசரேுமுனை அமெரிக்காற் பிடிக்கப்பட்டதென்றும் அமெரிக்கரே தெரிவிக்கின்றனர். பிருத்தானியபடை சிஸிலியின் கிழக்குக்கரையிலுள்ள இத்தலிய கடற்படைத் தானமாகிய சிறுக்கூஸ் என்னுமிடத்தைக் கைப்பற்றிவிட்டதாம். ஜர்மனியர் அமெரிக்க பிருத்தானிய சைநியங்களுடன் எதிர்த்துச் சமர்புரிந்து அவர்களைமுற்படச்செல்லவொட்டாது தடுக்கும்படி பெருந்திரளான தம் சைநியத்தையும் யுத்த உபகரணங்களையும் அக்றிக்கென்ரோ என்னும் தானத்திலே கொண்டுவந்து நிறுத்துகிறார்களாம். இப்பொழுது சிஸிலியில் தொடங்கி நடக்கும் கொடிய யுத்தம் இவ்வளவு காலமாக நடந்துவரும் மகா யுத்தத்திற்கு விரைவில் ஒரு முடிவைச் செய்யுமோ இல்லையேல் இன்னும் இந்த உலகயுத்தத்தைப் பரவச்செய்து மக்களைவாட்டித் துன்புறுத்துமோ என்பதைத் தீர்க்கமாக நாம் இந்தநேரத்திலே சொல்லுதல் முடியாது.

## கொழும்புச் சுப்பிறீங் கோட்டு விசாரணை

கொழும்பில் மூன்ருவது சுப்பிறீங்கோட்டு விசாரணை நேற்று முன்தினம் வழக்கம்போல் ஹலஸ்டார்பில் ஆரம்பமாகியது. நீதிபதி மிஸ்றர் மோஸ்லி தலைமைவகித்தார்.

விசாரணைக்கு ஆகமொத்தம் 116 வழக்குகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் 64 வழக்குகள் கொலை வழக்குகளாகும்.

# உலகம்பலவிதக் கதை

முற்றொடர்

### "வந்தகாரியம் அந்தரங்கமானது"

செல்வராசனைப்பற்றித் தன் தங்கை சொன்னதைக் கேட்டும் அச் செல்வராசன் தன் சகோதரிக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்தும் உள்ளத்திற் பெரும் "ஆத்திரம்" கொண்ட சொக்கலிங்கம் அன்று பகல் சிறிதுநேரம் தனியிடத்தேயிருந்து பலவாறு யோசித்தான். வெள்ளம் வருவதற்கு முன்னரே அணைகோலிக்கொள்ளல் வேண்டும் என்று சிந்தித்தான்; அவன் தன் தங்கையைச் சாவதானமாக இருக்கச்சொல்லிவிட்டு, அன்று மாலை 5 மணி வரையில் தான் இருக்கும் பட்டினத்திற்குரிய பொலிஸ்தானத்திற்குச் சென்று அத்தானத்திலுள்ள பொலிஸ்தலைவரை நேரிற் கண்டான்; அப்பொலிஸ் தலைவர் ஒரு அயிரோப்பியர்; தம் கடமையைத் திறம்பாது பார்ப்பவர்; மிகவும் அநுபவம் வாய்ந்தவர்; நீதி செய்வதில் தமர் பிறர் என்ற பேதம்பாராதவர்; ஊரில் யாதாயினும் அக்கிரமம் நடக்கின்றதென்பதைக் கேள்வியுற்றால், "ஒற்றிற்றெரியா சிறைப் புறத்தோர்துமெனப் - பொற்றோள் துணையாப் போதந்தும்-குற்றம், அறிவரிதென்றஞ்சுவதே செங்கோன்மை சென்று, முறைபிடினுங் கௌரமையன்று" என்றவாறு, தாமே மாறுவேடம் பூண்டு இராக்காலத்திலே தன்னந்தனியே ஊரிற் சஞ்சாரஞ்செய்து குற்றஞ் செய்வோரைக் கண்டு அகப்படுத்தி விசாரணையின்பின் தண்டனைக்காக்கும் திறமைபூண்டவர். ஊரவர் செய்யும் தவறைக்காட்டிலும், பொலிஸ்பகுதியார் ஏதும் தவறு செய்தால் அந்தத்தவறு பதின்மடங்கு குற்றமாகும் என்று தமக்குக் கீழுள்ள பொலிஸ் அதிகாரிகட்குப் பலமுறையும் புத்தி புகட்டி எச்சரிப்பது அந்தப் பொலிஸ் உத்தியோகத்தரின் இயல்பாகும். அவர் மாகாணப் பொலிஸ்தலைவராதலினால், அடுத்தவூர்ப் பொலிஸ்தானத்திலே அதிகாரம் வகித்திருக்கும் செல்வராசனும் அந்த பொலிஸ் தலைமை யுத்தியோகத்தருடைய அதிகாரத்துட்பட்டவனுகவேயிருந்தான்; மேலே சொல்லப்பட்ட இலக்கணங்களோடும் அதிகாரத்தோடுங் கூடிய அப்பொலிஸ் உத்தியோகத்தரிடம் சொக்கலிங்கம் போனபோது, அவர் அவனை வந்த காரணம் யாதென வினவுதலும் "ஐயா, வந்தகாரணம் அந்தரங்கமானது" என்று சொக்கலிங்கம் விநயமாக ஆங்கிலத்திலேயே பதில் சொன்னுன். உடனே அவர் தம் இருக்கைவிட்டெழுந்து சொக்கலிங்கத்தையுங் கூட்டிக்கொண்டு பிரத்தியேகமான ஒரு அறையுட் சென்று தாமும் இருந்துகொண்டு அவனையும் இருக்கச்செய்து "ஓய், தம்பி, நீர் கொஞ்சமும் பயமில்லாமல் உம்முடைய முறைப்பாட்டைச் சொல்லலாம்" என்று ஆதரவுடன் தெரிவித்தார். சொக்கலிங்கம் செல்வராசனுடைய அக்கிரமமான செயல் முழுவதையுஞ் சொல்லி, அவன் அன்று தன் சகோதரிக்கு எழுதிய கடிதத்தையும் காட்டி அதில் எழுதப்பட்டவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அந்தப் பொலிஸ் உத்தியோகத்தருக்கு விளங்கப்படுத்தினுன்; பொலிஸ்தலைவர் அவன் சொன்னவைகளையெல்லாம் அவதானமாகக் கேட்டபின் சிற்றச்சிரிப்புச் செய்து நெடிது நேரம் யோசித்தார்; பின்னர் சொக்கலிங்கத்தைப் பார்த்து "இன்றிரவு அவன் உங்கள் வீட்டிற்கு வருவானு" என்று வினவ "வருவானென்றுதான் காத்திருக்கிறேம், ஐயா" என்று பதில் சொன்னுன் சொக்கலிங்கம். "சரி, இப்பொழுது நீர் இங்கே வந்து என்னைக் கண்டதைத்தானும் எவருக்குஞ் சொல்லவேண்டாம்; எல்லாம் இரகசியமாக இருக்கட்டும்; ஆகவேண்டியதை நான் பார்த்துக் கொள்ளுவேன்; நீர் போகலாம்" என்று அந்தப் பொலிஸ்தலைவர் அவனை உத்தரவுகொடுத்து அனுப்பினர். சொக்கலிங்கம் மன ஆறுதலுடையவனுய் வீட்டிற்கு மீண்டு வந்து தன் தங்கைக்குமாத்திரம் விஷயத்தைச் சொல்லிவிட்டு அங்கே சிந்தனையோடு இருந்தான்.

### விடிந்த பின்னும் தடுமாற்றமா?

செல்வராசன் முருகேசபிள்ளை வீட்டிற்கு வந்தபோது நேரம் இரவு 11 மணிக்குமேலிருக்கும். அவன் அன்று அங்கே தனியே புறப்பட்டு வந்தானல்லன்; வரும்போது தன்கீழ்க் கடமைபார்க்கும் இரு பொலிசருடன் வந்தான்; ஆனல் அவர்களுடைய உடையும் செல்வராசனுடைய உடையும் உத்தியோக உடைகளல்ல; ஊரவரின் உடைபோன்ற சாமானிய உடைகளையே மூவருந்தரித்திருந்தார்கள்; செல்வராசன் தனக்குத் துணையாக வந்த இருவரையும் இரதத்திற்றனே இருக்கவிடுத்துத் தான்மாத்திரம் தனியே இறங்கி முருகேசபிள்ளை வீட்டை நோக்கி வருதற்கிடையில், இரதம் சற்றுத்தூரத்திற் போய்நின்றது. இரதம் வந்து தங்கள் வீட்டுவாசலுக்கு நேரே தங்கியமாத்திரத்தே, காஞ்சனமும் தமையனும் அது செல்வராசனுடைய இரதமாகவேயிருக்க வேண்டுமென்று யூகித்தறிந்தார்கள்; உடனே சொக்கலிங்கம் "தங்கைச்சி, அவதானமாக நடந்துகொள்" என்று சொல்லிவிட்டுத் தங்கள் வீட்டு வளவின் பின்புறத்துச் சென்று உலாவித்திரிந்தான்; காஞ்சனமாலையும் சரேலென அவ்விடத்தைவிட்டகன்று தலைவாசலுக்கு நேரே உட்புறத்திலுள்ளதாகிய ஒரு அறையில் வெளிச்சத்தையும் ஏற்றிவிட்டுத் தான் அங்கே இருந்துகொண்டு, மேனகாவிடம் ஏதோ இரகசியமாகச் சொல்லிவிட்டு, செல்வராசனை வரவேற்கும்படி தலைவாசற்புறம் அனுப்பினுள்; மேனகா வரக்கண்ட செல்வராஜன் "உங்கே உங்கள் ஐயா இருக்கிறுரா?" என்று கேட்க "ஐயாவுமில்லை, அம்மாவுமில்லை, சின்னம்மாதான் இருக்கிறது" என்று விடை சொன்னுள்; அதனைக்கேட்ட செல்வராஜன் சந்தோஷமடைந்து 'உன் சின்னம்மாளுக்கு நான் வந்து நிற்பதாகப் போய்ச்சொல்லு" எனலும், அவள் போய் மீண்டுவந்து "உங்களை அங்கே வரும்படி சின்னம்மா சொன்னது" என்று சொல்லி அவனைக் காஞ்சனமிருக்கும் அறைக்குக் கூட்டிக்கொணடு போனுள். போதலும் காஞ்சனம் இருக்கைவிட்டெழுந்து அவனை எதிரிலுள்ள ஒரு நாற்காலியில் இருக்கச்செய்துவிட்டுத் தான் நின்றுள்; அப்படி நின்றவளை, அவன் இருக்கும்படி சொல்ல இருந்தாள்; "நான் கொடுத்த கடிதம் கிடைத்ததோ, எல்லாம் படித்துப் பார்த்தீர்களோ" என்று அன்புகனியக் கேட்டான் செல்வராசன். "ஆம், படித்தேன்" என்று சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்தாள் காஞ்சனம்; "என்னுடைய கேள்விக்கு

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவேதாசுவரோபநிடதம்

(திரு. ஐ. பொன்னையா, ஏழாலை)

## முதலாம் அத்தியாயம்

(முற்றொடர்)

(௨) கால: ஸ்வபாவோ நியதிர் யதர்ச்சா பூதாநி யோநி: புருஷ இதி சிந்த்யா। ஸம்யோக ஏஷாம் நத்வாதமபாவாத் ஆத்மா அப்யநீஸ: ஸுகது:க ஹேதோ:

இ—ள்:- கால: (காரணம்)- (காலேச்சுரவாதிகள்) காலம் காரணமென்பர், ஸ்வபாவ:- (உலகாயதர்) இயல்பு காரணமென்பர், நியதி:- (கன்மவாதிகள்) கன்மம் காரணமென்பர், யதர்ச்சா- (சூனியவாதிகள்) சூனியம் காரணமென்பர், பூதாநி - (உலகாயதர் முதலியோர்) பூதங்கள் காரணமென்பர், யோநி:- (சாங்கியர்) பிரகிருதி காரணமென்பர், புருஷ:- (ஏகான்மவாதிகள்- மாயாவாதிகள்) புருஷன் காரணமென்பர், இதி சிந்த்யா - (இவை காரணமாவனவோ) என்று ஆராயத்தக்கது, ஏஷாம் ஸம்யோக: து- (சமுதாயவாதிகள்- சவுத்திராந்திகர் வைபாடிகர்) இவையனைத்துங்கூடிய சமுதாயங் காரணமென்பர், ஆத்மபாவாத் - (மாயா காரியங்களான இவையனைத்தும் சடமாய் இவற்றிற்கு வேறாயுள்ள) சேதனனாகிய ஓர் ஆத்மாவினால் தொழிற்படுதலுண்மையின், ந (காரணம்) (சமுதாயமும்) காரணமாகமாட்டாது, ஆத்மா அபி-(சேதனன் எனப்படும் ஆத்த) ஆன்மாவும், ஸுகது:கஹேதோ:-சுகதுக்கங்களுக்குட்பட்டுப் பாதந்திரனாய் நிற்றலால், அநீச: ஈசனாகமாட்டான் (காரணமாகிய பிரமமாகமாட்டான்)

மேல் மந்திரத்திலிருந்து வருவிக்கப்பட்ட "காரணம்" என்னுஞ் சொல்லை யாண்டுங் கூட்டுக.

குறிப்பு: க. சமுதாயம் காரணமன்று என மறுக்கவே அவ் ஏதுவினால் அவை தனித்தனியும் காரணமாகமாட்டா என மறுக்கப்பட்டவாறாயிற்று.

௨. அரசனுணைபோல நின்று அவரவர் கன்மப்பயனை அவரவரே நுகருமாறு நியமித்து நிறுத்துவது நியதி. ஆகலின் கன்மம் நியதியென்று உபசரிக்கப்பட்டது.

௩. மலத்தாற் றடுக்கப்பட்ட ஆன்மாவின் வியாபக அறிவிச்சை செயல்கள், மாயா காரியங்களான கலைவித்தை ஆராகங்களால் ஏகதேசமாய் விளங்கித் தோன்ற ஆன்மா அவற்றோடு கூடி புருடன் என நிற்பன். அது "அயர்விலாக் கலையின் றோன்றி யாணவ மொதுக்கிச்சித்தின், செயல்புரி கிரியாசத்தி தெரிவிக்குஞ் சிறிதே வித்தை, உயர்கலையதனிற் றோன்றி யறிவினை யுதிக்கப் பண்ணும்" என்றும் "விச்சையினாராகந் தோன்றி வினைவழி போகத்தின்கண், இச்சையைப் பண்ணி நிற்குந் தொழிலறு விச்சைமூன்றும், வைச்சபோ திச்சா ஞானக் கிரியை முன் மருவி யான்மா, நிச்சயம் புருடனாகிப் பொதுமையி னிற்பனன்றே" என்றும் போந்த சிவஞானசித்தித் திருவிருத்தங்களாலறிக. கலை முதலிய இம்மூன்றோடு போகத்தை வரையறுக்கும் காலமும், நியமிக்கும் நியதியுமாகிய இரண்டையும் பொருந்திப் புருடன் பஞ்சகஞ்சுகன் எனப் பெயர் பெறுவன். இது புருட தத்துவத்தின் பொதுநிலை. இனிச் சிறப்பு நிலையாவது, இக்கலாதிகளின் பின்னர்த் தோன்றும் மூலப்பிரகிருதி மாயைப் போகம் நுகர்தற் கேதுவாய், அப்பிரகிருதியிலுளவாகிய அஞ்ஞானம், அகங்காரம், அவா, ஆசை, கோபம் என்னும் பஞ்சக்கிலேசமுடையனாய்ப் போக்திருத்துவ மெய்தி நின்ற நிலை. கலாதிகள் கர்த்திருத்துவம் மட்டுமே யடைவிக்கும். இங்ஙனம் கர்த்திருத்துவம் போக்திருத்துவ மெய்திப் புருடனாய் நின்ற சேதனனைச் சடதத்துவங்களோடொன்றாக வைத்துச் சுருதி கூறிய தென்னையெனில, "புருடனுதற் கேதுவாய் விசேடித்து நிற்கும் தத்துவங்கள் சடமாதல்பற்றி, அடுத்த தன்றன்மையாய் நிற்கும் புருட தத்துவத்தையும் சடமென்று உபசரித்துக் கூறல் பொருந்துமாறறிக" (இது சிவஞான பாடியத்திற் கண்டது) புருடனைச் சடதத்துவங்களோடொன்றாக வைத்தொதுக்கிய சுருதி ஆன்மாவை மேலெடுத்துக் கொண்டு சுகதுக்கபோகம் நுகர்தற் கேதுவாகிய சுட்டறிவினையுடையனாய்ப் பாதந்திரப்பட்டு நிற்றலின் அவனும் ஈசனாகமாட்டான் என்று விதந்து கூறியமையினால் புருடன் என்றது ஆன்மாவின் உபாதி நிலையையே என்பது பெறப்பட்டவாறறிக. இவ்வத்தியாயத்தில் வரும் எட்டாவது மந்திரம், "அநீசஸ்சாத்மா பத்யதே போக்த்ருத்வபாவாத் - அதாவது, அனீசனை ஆன்மா போக்திருத்துவ பாவனையினால் பந்தமுறுகின்றனன் என்று கூறிற்று.

௪ இந்தப் புருடனையே ஏகான்மவாதிகள் ஆன்மா என்றும் பிரமமென்றும் கொள்ளுவர் என்பது அவர் பிரமத்திற்குக் கூறும் இலக்கணங்கொண்டறியலாகும். இருபத்தைந்தாந் தத்துவமாகிய பிரகிருதிக்கு அப்பால் நிற்பவனாய், அப்பிரகிருதியோடு கூடி முக்குணவசனாய்ச் சக சிவபரமாய் நிற்பவன் எவனோ அவனே யான்மா, அவனே பிரமம் என்பது அவர்கள் மதம். அன்றியும், ஞானமே ஆன்மா ஞானத்தைக் குணமாகவுடைய குணிப்பொருள் வேறில்லையென்றுங் கூறுவர். அவரையே "புருடன் காரணனன்று" என்பதனால் சுருதிகண்டித்தொதுக்கிற்று.

௫ இருபத்தைந்தாந் தத்துவத்தையே புருடன் என்றும் அப்புருடனே வாசுதேவன் என்றுங் கூறும் பாஞ்சராத்திரிகளும் ஈண்டே மறுக்கப்பட்டனர். இங்ஙனமே ஈங்குக் காட்டப்பெறாத ஏனைச் சமயங்களையும் அடங்குமாறறிந்தடக்கிக்கொள்ளுக. விரிக்கிற் பெருகும்.

௬ சிவஞான சித்தியார்-௩-௯0ல் "காலமோ அறிவின்றாகும்" எனக் காலம் காரணம் என்பதும், ௧-௩ல "இயல்பினுக்குச் செயலதின்று" என இயல்புகாரணமென்பதும், ௧-௩௧ல் "கன்மமு மணுவுங்கூடமொழிந்திடுஞ் சடமேயாக முடிதலால முடியாசெய்தி" எனக் கன்மம் காரணமென்பதும், ௧-௩ல் "செயற்படும் சேதனத்தால" எனப் பூதங்கள் காரணம் என்பதும், ௧-௩௭ல் "மாயைக்குணர் வொன்றுமில்லை யென்றே வைத்திடுமதனால்" எனப் பிரகிருதி காரணமென்பதும், ௧-௩௭ல் "புருடன்றானு மதனுக்காரணம் பெற்றுலறிதலால்" என ஆன்மாகாரணம என்பதும் மறுக்கப்பட்டவாறறிக. இன்னும் இவற்றின் மதமும மறுப்புமாயுள்ளவற்றின் விரிவையும், ஆன்மாவின் உண்மைநிலை உபாதிநிலை என்பவற்றி னியல்பையும் சித்தியார் சிவஞானபோதம் முதலியவற்றிலும் பௌஷ்கரம் முதலிய ஆகமங்களிலும் காண்க.

௭ இம்மந்திரத்தில் வரும் காலம் முதலிய ஐந்தும் ஆன்மா புருடனுதற் கேதுவாகிய காலம் கலை நியதி வித்தை ராகம் என்னும் பஞ்சகஞ்சுகத்தைக் குறிப்பனவாமெனவும் அவற்றோடு பிரகிருதியும் புருடனுமாகிய இரண்டுஞ் சேர்ந்த ஏழும் வித்தியாதத்துவங்களாமெனவும் சைவபுராணங் கூறும். அப்புராண வசனம் பின்வருமாறு:-

"புருஷஸ்யது அந்தரங்கதயா
தத்வபஞ்சகம் பரீகீர்த்திதம்।
நியதி: காலராகிச்ச வித்யாச
ததநந்தரம்।
கலாசபஞ்சகமிதம் மாயோத்பக்நம்
முநீச்வா।
தஜ்ஜாந்யேதாநி தத்வாநி சுருதி
யுத்தாநி ந சம்சய:
"காலஸ்வபாவோ நியதி" ரிதிச
சுருதிரப்ரவீத்।
ஏதத் பஞ்சகமேவாஸ்ய பஞ்சகஞ்
சுக முச்யதே।
அஜ்ஞாநம் பஞ்சதத்வாநி வித்வாநபி
விமுடதி:
நியதியதஸ்தாத் ப்ரகிருதேரு
பரிஸ்த: புமாநயம்।
வித்யாதத்வ மிதம் புரோக்தம"

(சைவபுராணம் கைலாசசங்கிதை ௯. 29-34) (தொடரும்)

# அபிமானிகளுக்கு ஓர்விண்ணப்பம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையானது உற்பத்தியான நாள் தொடக்கம் இற்றைவரையில் இங்குள்ள தமிழ் மக்கள் பொருட்டுப் பொதுவாகவும் சைவமக்கள் பொருட்டுச் சிறப்பாகவும் பல்லாற்றானும் உழைத்து வருகின்றது, இச்சபையார் செய்துவரும் பலதிறப்பட்ட முயற்சிகளுள் இவர்கள் பிரசுரித்துவரும் ஆங்கில தமிழ் இந்துசாதனப் பிரசுரங்களும் சைவப் பிள்ளைகளுக்குரிய பாலபாடங்கள், ஏனைய புத்தக வெளியீடுகள் ஆகிய இவைகளுமே பிரதானமானவை. ஆனால் சிலவருடங்களாகச் சபையாருடைய பத்திரிகைப் பிரசுரங்களிரண்டும் நஷ்டத்திலேயே நடத்தப்படுகின்றன. இதற்குக் காரணம் அச்சிடுதற்காகிய காகிதங்களின் விலை பன்மடங்கு ஏறியமையும்; மலாய்நாட்டில் முன்னர் இப் பிரசுரங்களை அபிமானித்து ஆதரித்துவந்த நமது அபிமானிகள் இப்பொழுது அப்படி ஆதரித்தற்கு இயலாதிருத்தலுமேயாம். இங்ஙனமானுலும் நமது முன்னோர் ஸ்தாபித்த இந்த தரும ஸ்தாபனங்களை இப்பொழுது தளர்ச்சியுற விடுதல் முறையாகாது. மேலேகாட்டப்பட்ட காரணங்களால் இச்சபைக்கு இப்பொழுது நேர்ந்துள்ள கடனை ஒருவாறு தீர்த்து இன்னமும் இதனை நன்னிலையில் நடத்தவேண்டுமென்ற நோக்கங் கொண்டு இதற்காகிய யோசனைகளைச் செய்யும்படி திருவாளர்கள்: A. V. குலசிங்கம், C. அருளம்பலம், R. சிவகுருநாதர், T. முத்துச்சுவாமிப்பிள்ளை, C. சிவசிதம்பரம் (டக்ரர்) V. M. சரவணமுத்து, S. பொன்னுச்சாமி, V. கந்தையா, V. T. சம்பந்தன், A. அருளம்பலம், M. மயில்வாகனம் என்னுமிவர்களைக்கொண்ட ஓர் உபநிருவாக சபை நியமிக்கப்படலாயிற்று. குறித்த உப சபையார் சென்ற யூன்மீ 27ந் திகதி கூடிய கூட்டத்தில் பின்வரும் நிர்ணயங்களை நிறைவேற்றியுள்ளனர்.

1. இச்சபையில் அபிமானம் வைத்துள்ள ஒவ்வொருவரிடத்தும் தானமாகப் பணம் பெறுதல்.

2. சங்கித கதம்பக் கச்சேரி வைத்து நடத்தி அதனால் வரும் ஊதியத்தைப்பெறுதலும், இங்கே படக்காட்சிவைத்து நடத்தும் அதிகாரிகளிடம் ஒருநாள் வருவாயையேனும் சபைக்கு உதவும்படி ஒழுங்கு செய்தலுமாம்.

இச்சபைக்கு நேர்ந்துள்ள கடனைத் தீர்த்து நிரந்தரமான நிதியைச் சேர்த்துவைத்தற்கு அபிமானிகள் ஒவ்வொருவரும் தங்களாலியன்ற பொருளுதவி செய்யும்படி இச்சபை கேட்டுக்கொள்ளுகிறது. பொருளுதவ விரும்புவோர்,

இந்துசாதன மனேஜர், வண்ணார்பண்ணை, (யாழ்ப்பாணம்.) என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கலாகும். எவ்வித பொருளுதவியும் நன்றியறிதலோடு ஏற்கப்பட்டுப் பற்றுச்சீட்டனுப்பப்படும்.

மு. மயில்வாகனம்,

யாழ்ப்பாணம், கௌரவகாரியதரிசி, சைவபரிபாலனசபை.

## ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

நிகழும் சுபானுஸு ஆனிமீ ௨௨ந் திகதி (6-7-43) மாலை 6-15 மணியளவில் கொழும்பு விவேகானந்தசபையின் ஆதரவில் வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. அப்பொழுது விவேகானந்த சபையின் உபதலைவராகிய திருவாளர். அ. சபாரத்தினம் அவர்கள் தலைமை வகித்தார்கள். முதலில் சில அன்பர்கள் தமிழ் மறையாகிய தேவார திருவாசகங்களை அன்புடன் ஓதினார்கள். பின்பு நடராஜப்பெருமானுக்கும் மாணிக்கவாசகசுவாமிகளுக்கும் வில்வம், தாமரை முதலிய நறுமலர்களால பூசனை நடைபெற்றது. அவ்வமயம் திரு. மு. வயிரமுத்து அவர்கள், 'அழுதடி அடைந்த அன்பராகிய' மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த 'போற்றித் திருவகவல்'க் கேட்பவர் மனம் நீராய் உருகும் வண்ணம் பக்திப் பரவசத்திலாழ்ந்து ஓதினார்கள்.

அதன்பின், பண்டித சிவங் கருணாலய பாண்டியப் புலவரவர்கள் சென்ற மூன்றாண்டுகளாக வெள்ளவத்தைச் சமயவகுப்பில் நடைபெற்ற திருக்கோவையாரிலுள்ள இறுதிச் செய்யுளை வாசித்துப் பொருள்கூறிப், பத்தாந் திருமுறையாகிய 'திருமந்திர' வகுப்பை ஆரம்பித்து வைத்தபின், மாணிக்கவாசக சுவாமிகள் பெருமையைப்பற்றி ஓர் இனிய விரிவுரை நிகழ்த்தினார்கள். றோயல் கலலூரி ஆசிரியராகிய திரு. அ. வி. மயில்வாகனம் அவர்களும் திருவாசகத்தின் பெருமையைப் பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இறுதியில் தலைவரவர்கள் மேனாட்டிலிருந்து இங்கு வந்து தமிழைக் கற்ற டாக்டர் போப் துரை (Dr. G.U. Pope) முதலிய அறிஞர்கள் திருவாசகத்தின் பெருமையை நன்குணர்ந்து அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்களென்றும், வாதவூரடிகள் 'சித்தஞ் சிவமாக்கிச்' செய்தபடியால் அரசன் பொருளைத் திருப்பணியில் செலவழித்தது தவறல்லவென்றும், சைவர்களாயுள்ளவர்கள் இத்திருநாளைக் கொண்டாடுதல் இன்றியமையாத தெனவுங் கூறினார்கள். ஈற்றில் விவேகானந்தசபையின் நகர்ப்புறக் காரியதரிசியாகிய திரு. அருள். தியாகராசா அவர்கள் தமது நன்றியறிதலைச் சபையின் சார்பாக அங்குள்ள அனைவோருக்கும் தெரிவித்தார்கள். பிரசாதம் வழங்கப்பட்டதும் கூட்டம் 9.30 மணியளவில் தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவேறியது. —கடிதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்ததர்மம்

(ராவ்சாஹிப் மு. ராகவையங்கார்)

(முற்றொடர்)

இனி மறநிலையறத்தின் மூன்றும் வகை, செஞ்சோறு உதவியோர் பகைவினஞ் செய்தல் என்பதாம். அஃதாவது உற்றவிடத்து உதவ வேண்டித் தமக்கு உணவு முதலிய போக பாக்கியங்களை அளித்துக் காத்த அரசர்க்கு பகைவரால் கேடு நேர்ந்தபோது அவர் பகையை யழித்துத் தம் தலைவரைக் காப்ப தாம். இவ்வுத்தம தர்மத்தை மேற்கொண்ட பாரத வீரர்களிலே துரோணர், கர்ணர் என்பார் முக்கி யமானவர்கள். நிரை மீட்சிக்காக நடந்த போரிலே அருச்சுனனைத் துரோணர் எதிர்த்து வந்தபோது, அவ்வீரசிகாமணி அவரை நோக்கி-

யாதுமொன்றறியா வென்னை
இவனலாதினையென் றிந்த
மேதினி மதிக்குமாறு
வின்முதற்படைகள் யாவும்
நீதறத் தந்தவுண்மைத்
தெய்வமே யென்றுற் பஞ்ச
நியபாதகர் தன்னிலொன் றன்
பதயுகம் பிழைப்பதையா

என்று பணிவுடன் கூறலானன். உடனே

அம்முனிதன் னேடிவ்வாறருச்சு
னன் புகல வல்விற்
கைம்முனிவனுஞ்செஞ்சோற்றுக்
கடன் கழித்திடுதல வேண்டும்
தெம்முனை மதியா வீரா
தேவர் தம் பகையை வென்ற
வெம்முனை காணுயானன்
வில்வளைத்திடுக என்றான்.

எனத் துரோணாச்சாரியர் கூறிய விடையை நம் பாரதவாசிரியர் அழகுறப் பாடுவர். இம்மறநிலையறத்தை துரியோதனன் மனங்கோணாமல் முடிவுரை நிறைவேற்றிய பெருவீரன் கன்னனே. குந்திதேவி, கண்ணன் தூண்டுதல்மேல் அவ்வள்ளலிடம் தனியே சென்று தானே அவனைப் பெற்றதாய் என்பதை அவனுக்கு மெய்ப்பித்துக் காட்டினள். காட்டவும் அவ்விருவருமே மனமிளகி நின்ற நிலையில்

குருகுலாதிபர்க்குங் குரிசிலாய்
வாழ்வு கூர்தி

என்று வேண்டிநின்றாள் குந்தி. அப்போது கன்னன்—

பெற்றநீர் மகவன் பிலாமையோ
வன்றிப்
பெரும்பழி காண்.யோ வீட்டீர்
ஆற்றை நாட்டெடாடங்கி
யென்னை
யின்றளவு மாருயிர்த் துணையெ
னக் கருதி
கொற்றமா மகுடம்புனைந்தரச
ளித்துக்
கூடவுண்டுரிய தம்பியரும்
சுற்றமானவருமென்னடி
வணங்கத்
தோற்றமுமேற்றமு மளித்தான்
மடந்தை பொற்றிருமேகலைமணி
யுகவே
மாசறத்திகழுமேகாந்த
விடந்தனிற் புரிந்தேயா
னயர்ந்திருப்ப
எடுக்கவோ கோக்கவோ என்றான்
திடம்பழுத்திடுவே லிராசராச
னுக்குச்
செருமுனைச் சென்று
செஞ்சோற்றுக்
கடன் கழிப்பதுவே
யெனக்கினிப்
புகழுங்கருமமும் தருமமும்
என்றான.

என வில்லிபுத்தூரர் பாடுதல் பலரும் அறிந்ததே. இது அப்பெருவீரனது செய்ந்நன்றியறிதற் குணத்தை எவ்வளவு சிறப்பித்துக் காட்டுகின்றது. மரண காலத்திலும் இவ்வுபகார ஸ்மிருதியோடு தன்னுயிர் விட்டவன் அவன். பதினேழா நாட்போரிலே அருச்சுனன் அம்புகளால் உடல் சல்லடைக் கண்களாய் ஆவி நிலைகலங்கி நின்ற அவ்வீரர் பெருந்தகையின் முன்பு கண்ணபிரான் ஒரு விருத்த வேதியனாய் எழுந்தருளி அன்றுவரை அவன் செய்த புண்ணியமனைத்தையும் அளிக்கும்படி யாசிக்கவும் பெரிதும் உவந்து அளித்தான் அவ்வள்ளல். அப்போது வியப்பும் உவப்பும் அடைந்த பெருமான் பெருங்கருணையோடு தன் பரமாத்மஸ்வரூபத்தை அவர்க்குக் காட்டியருளவே, பரமானந்த பரிதனான அத்தான வீரன்—

தருமகன் மகன் முதலான
அரியகாதற்
றம்பியரோ டமர்மலைந்து
தறுகணாண்மை
செருவிலென துயிரனைய
தோழற்காகச் செஞ்சோற்றுக்கடன்
கழித்தேன் தேவர்கோவுக்
குரிமை பெறுகவசமுங்
குண்டலமுமீந்
தேனுற்ற தொருநல்வினைப்
பேறுனக்கே தந்தேன்
மருதிடைமுன் தவழ்ந்தருளுஞ்
செங்கண்
மாலே மாதவத்தாலொரு
தமியேன் வாழ்ந்தவாறே

என்று வாயாரத் துதித்து உயிர் நீத்த வரலாறு பிரசித்தம். இனி இரண்டாம் புருஷார்த்தமான அர்த்தமும் அறநிலைப்பொருள் மறநிலைப் பொருள்என இருவகைப்படும். தீவினை விட்டீட்டுவது அறநிலைப் பொருள். மற்ற மறநிலையை—

அமருழந்து கொண்டவும்
அருந்திறை கொண்டவும்
தவறுசெய் தீயோர் தண்டப்
பொருளும்
கவர்சூது வென்றவும் மறநிலைப்
பொருளே,

என்போர் முன்னோர். இவற்றுள் சூதில்வென்ற பொருளையும் இவ்வகையிற் சேர்த்திருப்பதே குறிப்பிடத்தக்கது. இதனால் சகுனி வென்றுகொண்ட பொருள்களும் அக்காலத்தில முப்பாலின் சார்பானது என்பது தெரியலாம். காட்டிலிருந்த தருமபுத்திரனை நோக்கி வியாசர்—

கேடில் விழுச் செல்வங்
கேடெய்த சூதாடல்
வடவிழ் மன்னர்க் கியல்பே காண்--
வாடிக்
கலங்கலை நீ

என்று நளன் கதையைக்கூறி அவன் சோகந்தணித்தனர் என்பர் புகழேந்தியார்,

மூன்றும் புருஷார்த்தமான காமவின்பமும் அறநிலை மறநிலை என்று இரண்டாகும். காதலிருவர் கருத்தொருமித்தாதாவு பட்டது அறநிலையின்பமாம். ஏனையதை—

ஏறு தழுவல் இலக்கமெய்தல்
கூறுபொருள் கொடுத்தல்
வலிதிற் கோடல்
பாறுபடு நிலையின் மறநிலைப்
பொருளே,

என்பர். இவற்றுள் இலக்கமெய்தலையும் வலிதிற் கோடலையும் பாரத சரிதங்களால் நாம் நன்கறிபலாகும். கன்ய சுல்கமாக வைக்கப்பட்ட சுழல்சக்கர இலக்கை எய்தி திரௌபதையை அருச்சுனன் அடைந்த வரலாறு பிரசித்தம். இவ்வாறே வலிதிற் கோடல் என்ற வகையை, அம்பிகை அம்பாலிகை என்ற காசிராஜன் மகளிரை பீஷ்மர் தம் தம்பியின் பொருட்டு வலிதிற் பற்றி வந்து மணம் புரிவித்த கதையால் அறியலாம். இம்மறநிலையினை அசுரமணமென்பர். இவைபற்றிய வில்லிபுத்தூரர் வாக்கு இன்பமளிப்பன.

ஆகவே அறம் பொருளின்பமென்ற முப்பாலும் சாதுவான அறமுறையால் மட்டுமின்றி அசாதுவான மறமுறையாலும் அடையத்தக்கவை என்பது வில்லிபாரதத்தால் விளங்கிய செய்தி தெரியலாம். இனி நான்காம் புருஷார்த்தத்தைப் பானை கிளைந்திம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு, என்பர் ஔவையார். அதாவது இம்முப்பாலிடம் பற்றற்று பரம்பொருளையே பற்றுவதாம், 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்றார் பெரியார்.

செருக்களத்திலே தன் உற்றார் உறவினர்களையும் குரவர்களையும் கொன்று தாணியாள ஒருப்படேன் என்று கைசோர்ந்து நின்ற அருச்சுனனது நிலைகண்டு பார்த்தஸாரதியான பெருமான், அவனுக்குக் கர்ம, ஞானபக்தியோகங்களையும் உபதேசித்தும் அவனது உண்மை நிலையையும் தன பரஸ்வரூபத்தையும் தெளியக்காட்டியும் அவன் தன் தர்மத்தை விடாது செய்யவும் செய்தவற்றைத் தன்னிடம் அர்ப்பித்துத தன்னையே சரணமடையவும் கூறியும் உய்யக்கொண்ட சரிதம் உலகறிந்தது.

திருச்சி, 26—5—43

## திரு. வி. க. வின் ஒருமுகம்,

அ. வி. ம.

1935ம்ஆண்டு ஆனிமாசம் என்று ஞாபகம். ஒரு தமிழ் வாரசந்த மலர் வெளிவந்தது. அதனுள் பத்திராசிரியர் குறிப்பும் அதன் காரணமாகிய ஒரு படமும் இருந்தன. படம் பரதேசத்தது; ஒரு பேராசிரியர் தம் கையாலேயே வரைந்தது. அரசியல் நிலைமையைக் கண்ணாடிபோல் காட்டியது அப்படம். அதற்கு விமரிசனம் வேண்டியதில்லையாயினும் பத்திராசிரியர் தம் கடமையை நிறைவேற்றினர்.

ஆண்டுகள் சென்றன. படத்தையும் குறிப்பையும் மறந்துவிட்டேன். 1940ல் சென்னையில் திரு. வி. க. வைக் கண்டபோது பல விஷயங்களைப்பற்றியும் உரையாடிவிட்டு இப்படத்தைக் கொண்டு வந்து காட்டினர், இவர் இன்னும் இதனை வைத்திருக்கிறார்போலும்! படத்தைக் காட்டிவிட்டு இப்பேராசிரியரின் பல கடிதங்களையும் காண்பித்தார். இற்றில் இவர்தான் Dr. H. Beythan என்று அறியலானேன். அவர் தமிழில் எழுதிய கடிதங்கள், பொதிந்த பொருட்கள் எல்லாம் தமிழன்பைக் காட்டின.

தமிழமொனியும், சைவசித்தாந்த ஞானியும், தூயநடையுடையருமான திரு. வி. க. வின் பெருமைகளைப் பிறநாட்டவர் ஒருவர் மெச்சிய முறையை அக்கடிதங்கள் நன்கு காட்டின. மேலும் இவரை அப்பேராசிரியர் தம் நாட்டிற்கு வந்து குறள், திருவாசகம் முதலியவற்றைப் படிப்பிக்குமாறும வேண்டியுள்ளார். இவர் தண்டமிழ் நாட்டுப் பற்றினுலும் பதியெழுவறியாத் தன்மையானும் அதனை மறுத்து நாவலர் நூலகளைக் கற்க, என்று விடையிறுத்தார்.

பேராசிரியரும் கற்றார். கற்றபின் வேறொரு கடிதத்தில் கீழ்க் கண்டபடி வரைந்தார்:- "I have read the Periapuranam in Navalar's fine prose. I may dare say that he was my Guru for Tamil prose though I did never see him! (G. capital-faithful to original letters). இப்படியாகத் திரு. வி. க. நம்மைப் பாராட்டியுள்ளார். இவருக்கு அறுபது ஆண்டு அனுபவம் உண்டு. ஆயினும் உள்ளம் பிள்ளையுள்ளம். இவர் இன்னும் வாழ்க. சிறக்க.


# ஓரியன்ரல் பாங்க் ஒவ் மலாயா லிமிற்றெட்

(ஐக்கிய மலாய் நாடுகளில் பங்காளரின் நிதி வரையுளதாய் நிறுவப்பெற்றது)

## 8, மணிக்கூட்டுத்தெரு, யாழ்ப்பாணம்

மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்களின் அனுமதியும் அங்கீகாரமும் பெற்று வடஇலங்கையில் சகலவித வங்கித்துறைகளிலும் ஈடுபட்டு உழைக்கும் **தேசீயவங்கி** இது ஒன்றே.

இவ்விடத்தில்:—

1. நடைமுறை, நிரந்தரக் கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளுதல்;
2. அங்கீகரிக்கக்கூடிய தகுந்த பொறுப்புக்கு இலகுவானமுறையில் வட்டிக்குக் கடன்கொடுத்து வாங்குதல்;
3. இந்தியாவின் சகல பட்டினங்களுக்குத் தந்தியுண்டியல்களும்; கொழும்பு, மதுரை, சேலம், சென்னை, தூத்துக்குடி முதலிய இடங்களுக்குச் செக்குகளும், உண்டியல்களும் பரிமாறுதல்;
4. இந்திய நோட்டுகள் வாங்குதல் விற்றல் முதலியன சகலருடைய வசதிக்குமேற்ப நடைபெற்று வருகின்றன.

எஸ். பீ. யோசேப்,
மானேஜர்.

(Mis. 206. 25-2-43—24-3-43) (a)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஒருதடையுமில்லையே" என்று ஆவலுடன் கேட்டான் செல்வராசன்; "உண்டு" என்றாள் காஞ்சனம். சற்றுநேரம் யோசித்தான் அவன்;

செல்வராசன்: ஏன் அப்படிச் சொல்லுகிறீர்? விடிந்தபின்னுந் தடுமாற்றமா?

காஞ்சனம்: விடியவுமில்லை; தடுமாற்றம் மாறவுமில்லை;

செல்வ: அப்படியானால் என்னை ஏன் இந்த இரவில் வரும்படி அழைத்தீர்? முந்தியே விருப்பமில்லையென்பதை வெளிப்படையாக எனக்குச் சொல்லிவிடலாமே?

காஞ்சனம்: நான் உம்மை இங்கே அழைக்கவுமில்லை; விருப்பமென்று உமக்குச் சொல்லவுமில்லை; நீராகவே வலிந்து வருவதற்கு நான் செய்வதென்ன?

செல்வ: கண்மணீ, என்னை இன்னமுஞ் சோதிக்கவேண்டாம்; என் கேள்விக்கு நீர் இசைந்து நடந்தால் உமக்கும் பெருமையுண்டு; எனக்கும் சந்தோஷமுண்டாம்; கரும்பு தின்னக் கைக்கூலி கேட்பவர்போல இருக்கின்றது உம்முடைய நோக்கம்; நல்லாய் யோசித்துப்பாரும்; எனக்குப் பலவிடத்திலே தக்க சீதனத்தோடு கல்வியறிவு நாகரிகத்திற் சிறந்த கன்னியரை இன்னமும் மணம் பேசி வருகிறார்கள்; அவர்களையெல்லாம் வேண்டாமென்று புறக்கணித்துவிட்டு உம்மீது ஆசைகொண்டு உம்மையே தஞ்சமென்று நம்பிவந்த என்னை நீர் புறக்கணிப்பது முறையாகுமா? என்னைவிட உமக்கு வேறுயாரும் அந்தரங்கமான காதலர் இருந்தால் அதை எனக்குச் சொல்லிவிடும்; வெளியிட்டால் நான் உடனே இந்த எண்ணத்தை அறவே மறந்து இவ்விடம் விட்டு இந்தநிமிஷமே போய் விடுகின்றேன்.

காஞ்சனம்: ஐயா, உம்மைப் போன்ற படித்தவர், பொறுப்பான உத்தியோகம்வகித்திருப்பவர், நாலுகாரியமும் அறிந்தவர், நாகரீகம் படைத்தவர் இந்தவிதமாக வீண் வார்த்தை பேசுவதையிட்டுத்தான் கவலைப்படுகின்றேன்; எனக்கு இந்தக் கருமம் எள்ளளவும் பிரியமில்லையென்பதை ஒருமுறையல்ல, இருமுறையல்ல, பலமுறை உமக்குச் சொல்லிவிட்டேன்; ஆனால் நீர் நான் சொன்னவைகளை விளங்கியும் விளங்காதவர்போல, இங்கே பலதரம் அகாலத்தில் வந்து என்னை இப்படிக் கேளாக் கேள்வி கேட்டுச் சங்கடப்படுத்துவது சரியல்ல! இப்பொழுது நான் சொல்வதைத் தீர்க்கமாக நம்புவீர்; என் மீது கொண்ட தகாத மோகத்தால் நீர் உம்முடைய உத்தியோகத்தின் பொறுப்பையும் பெருந்தன்மையையும் உலகத்தில் நீர் செய்யவேண்டிய கடமைகளையும் மதிப்பையும் அறவே மறந்து உன்மத்தர்போற் பிதற்றுகின்றீர்; இந்தப் பெண்ணாசையாற் கெட்டோர் இக்காலத்தில் மாத்திரமல்ல அக்காலத்திலும் பலரானார்கள்;

"இந்திரனார் மெய்யிற்கண் ஈரைஞ்ஞூறானதுவும்
அந்தணனார் சென்னியிலொன் றற்றதுவும்
சுந்தோபசுந்தர் மடிந்ததுவுஞ் சுக்கிரீவனால் வாலி
மூந்த மடிந்ததுவும் முந்தொருநாள்
சந்தன் மரமானதும் இலங்கைவேந்தன்
சிந்துசிரமானதும்,
வச்சிரதேகத்துரம்படைத்த
கீசகனார் மாண்டதுவும் கேட்டிரிலையோ
பெண்ணாசையினாலென்பதறியிரோ."

என்று முன்னோர் பாடியிருக்கிறார்கள்; ஆனதால் இந்தச் சஞ்சல புத்தியை மறந்து விடுதிர்; தண்ணீரும் மூன்றுபிழை பொறுக்குமென்பது பழமொழி; அதுபோல, உம்முடைய வாழ்க்கைக்குக் கேடு செய்யவொண்ணாதென வெண்ணியே, நீர் இத்தனைநாளுஞ் செய்யத் துணிந்த அக்கிரமத்தைப் பொறுத்து வந்தேன், உம்மால் எனக்கு ஏதுங் கேடுசெய்ய முடியாதென்பது எனக்குத் தெரியும், ஈசனுக்குத் தெரியும்; உம்முடைய நல் வாழ்க்கையில் உமக்கு ஆசையிருந்தால் இந்த நிமிஷமே நீர் இவ்விடத்தைவிட்டு மரியாதையோடு எழுந்து போவது நல்லது என்று ஆவேசத்துடன் கூறி நின்றாள்.

அவள் உரைத்த உறுதிவார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தே செல்வராசன் உண்மையை உணரானாய்த் தன்னை அவள் அவமதிக்கின்றாளென்றெண்ணி அடங்காச் சீற்றங் கொண்டான்; தன்னையும் தன் னுத்தியோகத்தையும் அந்த நேரத்தில் அறவே மறந்தான்; "ஏ! அறிவிலாச் சிறுமியே! என்னை யாரென்று நினைத்தாய்? இதமாக உன்னை உடன் படுத்திக்கொண்டு போகலாமென்று வந்தேன்! அதற்கு நீ உடன் பட்டிலை; எல்லாமறிந்த எனக்கு நீ புத்திசொல்லத் தலைப்பட்டாய்; இன்றைக்கு என்னை ஏமாற்ற உன்னால் முடியாது! இதோபார்! உன்னுடைய எளிமையையும் என்னுடைய வலிமையையும் உனக்கே காட்டிவைக்கிறேன்; நான் உன்னைப் பற்றித் தூக்கிக்கொண்டு போனால் உன்னால் என்னசெய்ய முடியும்? சரி, இன்னுமொருமுறை கேட்கிறேன்! நீ என்னுடன் வருகிறாயா? இல்லையா" என்று சீற்றம் பொங்கியவனாய் அவன் கேட்க, அவள் "ஒருபோதும் வரமாட்டேன்; உன்னால் ஆனதைச்செய்து பார்" என்று சொல்லிமுடிவதற்கிடையில், செல்வராசன் காஞ்சனத்தின் கரத்தைப்பற்றும்படி சமீபத்திற் செல்ல, அவள் அவன் கைக்குத்தப்பி அடுத்த அறைபுட்புக, அவளுடன் நின்ற மேனகா பிறகே ஓட, செல்வராசன் அவர்களைத் தொடர்ந்து, இருள் நரகத்துட் புகுவான்போல், அந்த இருட்டறையுட் தானும் புக, அதற்கிடையில் காஞ்சனமாலை அந்த வெளிச்சமில்லாத அறையைக் கடந்து அவ்வறையின் அந்தப்பக்கத்துக் கதவைப் புறத்தே நின்று பூட்டிவிட்டாள் ஆனால் அவள் அப்படிப் பூட்டும்போது பாவம்! மேனகா அந்த இருட்டறையுள் அகப்பட்டுக்கொண்டு தியங்கினாள்; இதற்கிடையில் அந்த இருட்டறையிலுள்ள இந்தப்பக்கத்து வாசல், (அதாவது காஞ்சனம் புக, செல்வராசன் தொடர்ந்து சென்ற வாசற்கதவும்) பூட்டப்பட்டது; செல்வராசன் அந்த இருட்டறையிலே, பொறியிலகப்பட்ட எலி போல் நின்று தியங்கி, தான் எவ்வாற்றானும் வெளிபேவர மார்க்கமுண்டோ என்று சுவரைத் தடவிப் பார்க்கும்போது, அவன் கரம் ஒரு பெண்ணின் மேனியிற் படுதலும், 'ஏ! காஞ்சனம்! என்ன? வேடிக்கை செய்கிறீரா" என்று மெல்லக் கேட்க, "நான் காஞ்சனமல்ல மெனிக்கா, ஐயா" என்று பதில் சொல்லி ஒதுங்கி நின்றாள் சிங்களச் சிறுமி. "உனக்கும் என்கதிதானா" என்று சொல்லி மனம் புழுங்க அறையுட்டானே நின்றான் செல்வராசன்.

### இன்னும் இரக்கமா?

அந்த இருட்டறையின் முற்புறத்துக் கதவை ஓடிவந்து பூட்டியவன் சொக்கலிங்கமாவன். இவைகளெல்லாம் அன்று முந்தியே யோசித்து நிச்சயிக்கப்பட்ட செயல்களாகும் சற்றுநேரத்தில் நாம் முன் சொன்ன, அந்த மாகாணப் பொலிஸ்தலைவரும் [illegible] சருடன் முருகேசபிள்ளைவீட்டு மார்க்கமாக வரும்போது செல்வராசனுடைய மோட்டரதம் தெருவோரத்தில் நிற்பதைக்கண்டு தம் இரதத்தை நிறுத்தி இறங்கி, அந்த இரதத்திற்குச் சமீபத்திற் போய், "உது யாருடைய இரதம்? இங்கே நிற்பதற்கு நியாயமென்ன?" என்று கேட்டார்; கேட்டபோது அது இன்னாருடைய இரதமென்றும் அதிலிருந்த செல்வராசா சமீபத்திலேயுள்ள வீட்டிற்குப் போயிருக்கிறாரென்றும் விரைவில் வந்துவிடுவாரென்றும், அந்த இரதத்திலிருந்த பொலிஸர் இருவரும் இரதத்தை விட்டு வெளியே இறங்கி வந்து பயபத்தியோடு பொலிஸ் தலைவருக்குச் சொன்னார்கள். பொலிஸ் தலைவர் அதனைக் கேட்டுக்கொண்டு செல்வராசனுடைய அந்த இரதத்திற்குத் தம்முடன் வந்த ஒருவனைக் காவலாக நிற்கக் கட்டளை செய்துவிட்டு, முருகேசபிள்ளையின் வீட்டுவாசலை யடைந்தவுடன் இரதத்தை விட்டிறங்கி, தம்முடன் வந்த மற்றப் பொலிசை இரதத்திற்றானே இருக்கவிட்டுத் தாம் தலைவாசலை நோக்கிச் சென்றார். அவருடைய வரவையே எதிர்பார்த்துக் கொண்டு நின்ற சொக்கலிங்கன் அவரை எதிர்கொண்டழைத்துக் கொண்டுபோய்த் தலைவாசலின் முற்புறத்துள்ள அந்தப் பூந்தோட்டத்தில் ஒரு ஆசனத்திலே இருக்கச்செய்து பக்கலில் விநயமாக நின்றான். "என்ன, ஆள் வந்துவிட்டதுபோலிருக்கிறது" என்று பொலிஸ்தலைவர் சொக்கலிங்கனை மெல்ல வினவ, "ஆம் ஐயா, ஆள் வந்துவிட்டது; வந்த ஆளை அகப்படுத்தி வைத்திருக்கிறோம்" என்று முழுவிபரத்தையும் அவன் அவருக்குச் சொன்னான். பொலிஸ்தலைவர்சிறிது நேரம் யோசித்துவிட்டு, சொக்கலிங்கத்தையுங் கூட்டிக்கொண்டு தலைவாசற் பக்கமாகச் சென்று அங்குள்ள ஒரு நாற்காலியில் இருந்துகொண்டு பின்னரும் யோசித்தார். பின்னரும் அவர் சொக்கலிங்கத்தை நோக்கி "உமது சகோதரியை நான் பார்க்கலாமோ" என்று கேட்பதற்கிடையில் "ஆம் ஐயா நல்லாய்ப் பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டு விரைந்துபோய்க் காஞ்சனத்தை அழைத்துக்கொண்டு வந்து பொலிஸ்தலைவர் முன்னிலையில் விட, அவள் நமஸ்காரஞ் செய்ய, பொலிஸ்தலைவரும் பிரதி நமஸ்காரஞ் செய்து தம்மிடத்திலிருந்த கடிதத்தைக் காஞ்சனத்திற்குக் காட்டி "இது செல்வராஜா உமக்கு எழுதிய கடிதமா" என்று கேட்க "ஆம், துரையே" என்று விநயமாகப் பதில்சொன்னாள் காஞ்சனம். "நல்லது, எல்லாம் எனக்கு விளங்கும்; அந்த மனுஷன் கெட்டுப் போனான்; அவன் தண்டிக்கப்படவேண்டும்; எங்கள் பொலிஸ் பகுதியில் இருந்துகொண்டு இப்படிச் செய்ய முடியாது; புத்தியில்லாத மனுஷன்" என்று வெறுப்புடன் சொன்னார் பொலிஸ்தலைவர்; "பாவம், துரையே, புத்தியில்லாத மனுஷனுனதாற்றான் இப்படிச் சிக்கிக்கொண்டது; இளம் ஆள், அந்த ஆளுடைய பின் வாழ்க்கையைக் கெடுக்கக்கூடாது, துரையே" என்று காஞ்சனம் நமஸ்காரஞ் செய்து சொல்லுதலும், பொலிஸ்தலைவர் புன்னகைசெய்து "இன்னும் அந்த ஆளில் உமக்கு இரக்கம் இருக்கிறது; நீர் நல்ல குணமான பிள்ளைபோற் காணப்படுகிறது; சரி அப்படிச் செய்கிறேன்" என்று பொலிஸ் தலைவர் சொல்லிப் பிரதி நமஸ்காரஞ் செய்ய, அவரிடம் விடைபெற்றுக்கொண்டு காஞ்சனம் தன்னிடத்தையடைந்தாள். பொலிஸ் தலைவர் சொக்கலிங்கத்திடம் அந்த [illegible] வாங்கித் தன்னுடன் வந்த பொலிசிடம் கொடுத்து அவனையும்சொக்கலிங்கத்தையுங் கூட்டிக்கொண்டு அக்கதவண்டை சென்றார். (வரும்)

## புராதன சித்திரங்களைப் பாதுகாத்தல்

இலங்கையின் புராதன சின்னங்களைப் பாதுகாத்து நிர்வகிப்பதற்குத் தகுதிவாய்ந்த தனிப்பட்ட அதிகாரி ஒருவரை நியமிக்கும்படி இந்திய அரசாங்கத்தின் புதைபொருள் ஆராய்ச்சி ரசாயன அதிகாரி கான் பகதூர் மொகமது சனுஉல்லா சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது.

சிகிரியாவிலுள்ள குகைச் சித்திரங்கள் சீரழிவதைத் தடுக்கும் பொருட்டுக் கான்பகதூர் சமீபத்தில் அவற்றைச் செப்பனிட்டார். அவற்றைப் பத்திரப்படுத்துவதற்கு எவ்விதமான முறைகளைக் கையாளவேண்டுமென்று ஆலோசனை கூறி ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி இவ்வதிகாரி கேட்டுக்கொள்ளப் பட்டிருந்தார்.

புராதனச் சித்திரங்களைப் பத்திரப்படுத்துவதற்குப்போதியகவனஞ் செலுத்தப்படவில்லையென்று இவர் தமது அறிக்கையிற் கூறுகிறார். தகுந்த அதிகாரி ஒருவர் இல்லாமையும் இதன் காரணங்களில் ஒன்றென்று இவர்குறிப்பிட்டு சித்திரங்களைக் கவனிப்பதற்குப் புதைபொருள் ஆராய்ச்சி ரசாயன அதிகாரி ஒருவரை நியமிக்கும்படி சிபார்சு செய்திருக்கிறார்.

சித்திரங்களில் அழிந்துபோன பகுதிகளைத் திருத்தியமைப்பதால் புராதனச் சித்திரங்களின் மதிப்புக் குறைந்துவிடுமென்று கான் பகதூர் குறிப்பிட்டுக் குறித்த வழக்கத்தை மிகக் கண்டித்துள்ளார்.

அறிக்கையிற் பெரும்பாலும் பல சித்திரங்களின் இப்போதைய நிலைமையே விவரிக்கப்பட்டிருக்கிறது. பொலநறுவையிலுள்ள தெமல மகா சேயாவின் சித்திரங்களையும் டம்புலாமலை ஆலயத்தின் குகைச் சித்திரங்களையும் பத்திரப்படுத்துவதானால் தாமதமின்றித் தக்க முறைகளைக் கையாள வேண்டுமென்று விசேஷமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கண்டிக்குச் சமீபத்திலுள்ள தெகல்தொருவை விஹாரையின் சித்திரங்கள்பற்றியும் தென் மாகாணத்திலுள்ள தெல்வத்தை ஆலயத்தின் சித்திரங்கள்பற்றியும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

யுத்தத்தின்போது புராதனச் சித்திரங்களுக்காக விமானத் தாக்குதல பாதுகாப்பு முறைகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

---

## ஏழாலை சைவ சன்மார்க்க சபை

நிகழும் சுபானுவருஷம் ஆனிமீ 19ந் தேதி (3-7-43) சனிக்கிழமை மாலை ஏழுமணியளவில் "ஏழாலை சைவ சன்மார்க்க சபை"யின் பொதுக்கூட்டமொன்று ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் நடைபெற்றது. சபையின் உத்தியோகஸ்தர் தெரிவு நடைபெற்றது. தலைவர் திரு. மு. சரவணமுத்து உபதலைவர்கள் திருவாளர்கள் மு. தில்லையம்பலம், செ. சின்னத்துரை, க. செல்லையா, காரியதரிசி திரு. மு. அருளானந்தம், உபகாரியதரிசி திரு. கா. நல்லதம்பி, தனாதிகாரி திரு. மு. நடராசா, கணக்குப் பரிசோதகர் திரு. இ. குணரதினம், நிர்வாகசபை அங்கத்தவர்களாக மூவர் தெரிவு செய்யப்பட்டனர். சபைக்குரிய பிரமாணங்கள் வகுப்பதற்காக மூவர் தெரியப்பட்ட பின்னர்க் கூட்டம் இனிது நிறைவேறிற்று. -கடித.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கப்பூரில் சுபாஷ் சந்திரபோஸ்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின்மீது கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் ஏககாலத்தில் தாக்குவதற்காக அச்சுநாடுகள் போட்ட திட்டத்திற்கு அனுசாணையாகச் சுபாஷ்போஸைக்கொண்டு பிரசாரம் நடத்தினுர்கள். சென்ற வருஷம் மே மாதம் 27-ந் தேதியன்று ஜப்பானியப் பத்திரிகையான நிதி நிகியில் பெர்லின் நிருபர் ஹிட்லரும் முஸோலினியும் இப்பொழுது போஸைக்குப் பேட்டியளித்திருக்கிறுர்கள். இந்தியாவின் மீது தாக்குதலை ஆரம்பிப்பதற்குச் சரியான சமயம் வாய்த்துவிட்டதாக ஜெர்மனியும் இத்தாலியும் கருதுகின்றன என்பதையே இது காட்டுகின்றது என்று டோக்கியோவுக்குச் செய்தி அனுப்பினுர்.

இந்த வாரம் டோக்கியோவிலிருந்து நான்குமுறை வெவ்வேறு பாஷைகளில் அவர் பிரசங்கம் செய்தார். அவைகளில் மூன்று பிரசங்கங்கள் ஒரேமாதிரியிருந்தன. ஜெர்மன் பாஷையில் ஜெர்மனிக்குச் செய்த பிரசங்கத்தில் மட்டிலும் சில மாறுதல்கள் இருந்தன. அவர் இந்தியாவுக்குச் செய்த பிரசங்கத்தில் ஒருபகுதி வியாக்கியானம் ஏதுமின்றி அப்படியே கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

"ஜப்பானிய சாம்ராஜ்யப்படைகள் இப்பொழுது இந்தியாவின் எல்லையில் இருக்கின்றன. ஜப்பானிய அரசாங்கம் அதன் ஒப்பற்ற பிரதம மந்திரியாக ஜெனறல் டோஜோவின் மூலம் இந்தியாவின் சுதந்திரத்துக்குப் பூரண உதவி செய்வதாக உறுதி கூறியிருக்கிறது. சாம்ராஜயம் இறுதியில முறிந்துபோகுமேயொழிய ஒருபொழுதும் வளைந்து கொடுக்காது. மனித சரித்திரத்திலேயே சாம்ராஜ்யங்களுக்கெல்லாம் இந்தக் கதிதான் விளைந்திருக்கிறது.

## நகரசபைக் கமிஷனரின் அதிகாரங்கள்

பரிசீலனை அடுத்தவருடத்துக்குப் பின்போடப்பட் டிருக்கிறது

நகரசபைக் கமிஷனருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் பரிசிலனைசெய்வதற்காக ஒரு கமிட்டி நியமிப்பது அடுத்த வருடத்துக்குப் பின்போட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தில் இது சம்பந்தமான ஒரு தீர்மானம் பெரும்பான்மையான வாக்குக்களால் நிறைவேறியது.

திரு. எஸ். சரவணமுத்து பேசுகையில நகரசபை நிர்வாகத்தைப் பற்றி அங்கத்தவர்களுக்கு எவ்வித தகவல்களும் அறிவிக்கப்படுகிறதில்லையென்று கூறினுர்.

கமிஷனரின் அதிகாரங்களைப் பரிசிலனை செய்யும் விஷயத்தைப் புதிய நகரசபைக்கு விடவேண்டுமென்று மிஸ்றர் ஜஸ்டின் கொத்தலாவல கூறினுர்.

இதுசம்பந்தமாக வேறு பல அங்கத்தவர்களும் பேசியபின் தீர்மானம் நிறைவேறியது.

கொழும்பு டிரும்வேயை வாங்குவது சம்பந்தமான விஷயங்களை ஆலோசிப்பதற்காகச் சபையின் இரகசியக் கூட்டமொன்றும் நடைபெற்றது.

அடுத்ததாகத் திம்பிரிகஸ்யாயவில் ஒரு மார்க்கட் கட்டுவதற்காக 47000 ரூபாய் அனுமதிக்குமாறு நிதிக் 'கமிட்டி' செய்த சிபார்சு ஆலோசிக்கப்பட்டது. இது சம்பந்தமாகப் பலர் பேசியபின் நிதிக் கமிட்டியின் சிபார்சு அங்கீகரிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணச் சிவனடியார் திருக்கூட்டம் நடைபெருதாம்

இச்சபையின் ஆதரவில் நாளை (16-7-43) வெள்ளிக்கிழமை சைவ பரிபாலனசபை நிலையத்தில் நடப்பதாகத் தெரிவித்த சைவப் பிரசங்கம் காத்திராப்பிரகாரம் ஏற்பட்ட வசதிக்குறைவு காரணமாக நடைபெருதெனை மேற்படி சபைக் காரியஸ்தர் இப்பொழுது தெரிவிக்கின்றுர்.

## தேவை

தொண்டமானுறு ஐக்கியசங்கப் பண்டகசாலைக்கு ஒரு மனேசரும், விற்பனவு காரன் ஒருவரும் தேவை. மனேஜர் ரூபா 300 பிணை கட்டவேண்டும். மாதச்சம்பளம் ரூபா 30. விற்பனவு காரனின் சம்பளம் ரூபா 18. விரும்புவோர் 26-7.43 க்கு முன்னர் காரியதரிசிக்கு விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

தொண்டமானுறு, 13.7.43.

(Mis. 79. 15 & 19.7.43)

## இலங்கை மதுபானத் தீர்வை இலாகா

நிலையற்ற காட்மார்கள்

1. மதுபானத் தீர்வை இலாக்காவில் நிலையற்ற காட்மார் வேலைகளை முன்னிட்டு விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஆடிமீ 27ந் தேதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்கு முன் இக்கந்தோரை அடைய வேண்டும்.

2. விண்ணப்பக் காரர்கள் இலங்கையராக இருக்கவேண்டும். இறுதிக் தெரிவுக்குமுன், பிறப்பு, படிப்பு என்பவை பற்றி மூலச்சான்றுப் பத்திரங்கள் காண்பிக்கும்படி வேண்டப்படும்.

3. விண்ணப்பக் காரர்கள் குறைந்தது பின்வரும் யோக்கியதைகளை உடையவர்களா யிருக்கவேண்டும். வயது 1943ம் ஆண்டு ஆவணிமாசம் 1ந் தேதியன்று 18 வயதிலிருந்து 26 வரையும்; உயரம் 5' 2" மார்பு (மூச்சு வாங்காமல்) 30" படிப்பு சிங்களம் அல்லது தமிழில் 5ம் தரம்.

4. எல்லா நியமிப்புக்களும், நிலையற்ற நீடிப்பு உள்ளன. 24 மணித்தியால முன் அறிவிப்புடன் முடிவு பெறப்படுவன. இத்தகைய காட்மார்களுக்கு மாதம் 30 ரூபா சம்பளமும் யுத்த சகாயமும் கொடுக்கப்படும்.

5. விண்ணப்பக்காரர்கள் தெரிவுக்குத் தங்கள் செலவிலேயே வந்துபோக வேண்டும். தெரிந்து எடுக்கப்பட்டவர்கள் வைத்திய சோதனைக்கு உள்ளாகி அதில் சித்தியடையவேண்டும்.

6. மதுபானத் தீர்வைக் காரியஸ்தரையோ அல்லது அவரின் இலாகாவிலுள்ளமற்றைய உத்தியோகத்தரையோ பேட்டிகாண முயன்ருல், அம்முயற்சி அவ்விண்ணப்பக்காரரின் தெரிவுக்குப் பாதகமாகும்.

ரீ. வீ. சரவணமுத்து,
மதுபானத்திர்வை இலாக்கா அதிபர்.

மதுபானத் தீர்வைத் தலைமைக்கந்தோர்,
கட்டுகஸ்தோட்டை.
10.7.43.

மதுபானத்தீர்வை இலாக்காவில் நிலையற்ற காட்மார் வேலைகளை முன்னிட்டு விண்ணப்பங்கள்.

கீழ்க்காணப்படும் விண்ணப்பப் பத்திரமுறையில் விண்ணப்பக்காரரின் சொந்தக் கையெழுத்தினலேயே நிரப்பி கட்டுகஸ்தோட்டை, மதுபானத் தீர்வை தலைமைக் கந்தோருக்கு அனுப்ப வேண்டும்.

1 முழுப்பெயரும், விபரமும்.
2 ஜாதி.
3 பிறப்புத் திகதி.
4 விவாகமுள்ள, அல்லது இல்லாத.
5 உயரம்.
6 மார்பு அகலம் (மூச்சு வாங்காமல்)
7 வித்தியாதானத்துக்குரிய யோக்கியதை (சித்தியடைந்த சோதனை)
8 பயிற்சிசெய்த கல்லூரியின்பெயர்.
9 கல்லூரி விட்டபின் செய்த தொழிலின் விவரம்.
10 விசேஷமான யோக்கியதை ஏதாவது.
11 சான்றுப் பத்திரங்கள் யாரிடமிருந்து?

(சான்றுப் பத்திரங்களில் கூடியது இரண்டு அணைக்க. 3ம், 7ம், 8ம், 10ம், பகுதிகளில் குறிக்கப்படும் (சான்றுரைகளின் மூலப் பிரதிகள் அனுப்பப்படாது. தேவைப்பட்ட நேரத்தில் காட்டத் [illegible]
தேதி:

(G 16. 15-7-43)

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### வெள்ளி ஜுலை 16

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 தந்திஇசை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஆர் ராமமூர்த்தி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 ஆர் ராமமூர்த்தி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 கே. எஸ். தனம் சகோதரிகள் பாட்டு 5-40 தூரான்—ஷரீப் விளக்கம் 6 இஞ்சிக்குடி பிச்சைக்கண்ணு சகோதரர்கள் நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கே. எஸ். தனம் சகோதரிகள் பாட்டு 8-30 இஞ்சிக்குடி பிச்சைக் கண்ணு சகோதரர்கள் நாகஸ்வரம் 9 கவியின் போக்கு 9 20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9 45 உலக விவகாரங்கள் 10 கதம்பம் † 10-30 முடிவு.

### சனி யூலை 17

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திருப்பாப்புலியூர் வி. ராஜம் ஐயர் வயலின் 9 முடிவு.

1 பி. பொன்னம்மாள் பாட்டு 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கதம்பம் 2 தமிழில் செய்திகள் 2–05 திருப்பாம் புலியூர் வி. ராஜம் ஐயர் வயலின் 2.30 முடிவு.

மாலை 5 பி. பொன்னம்மாள் பாட்டு 5-40 திருவாரூர் மும்மணிக்கோவை விளக்கம் 6 டாக்கி இசை † 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 இவை இன்றி சிரிப்பு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 ஆடி மாப்பிள்ளை நாடகம் 8 மதராஸில் உள்ளபடி 9-15 ரதன்பாய் † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 வீணை, கோட்டுவாத்தியம் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### ஞாயிறு யூலை 18

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 கீவளூர் மீனுக்ஷி சுந்தரம்பிள்ளை 8-15 ஆங்கிலத்தில் செய்கள் 8-30 ஆர். பிச்சுமணி ஐயர் வீணை 9 முடிவு.

12 கதம்பம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் கிட்டம்மாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இசைக்கதம்பம் † 2-30 முடிவு.

மாலை 5 ஆர். பிச்சுமணி ஐயர் வீணை 5.40 தேவாராதனை 6 எஸ் கிட்டம்மாள் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 குடிசைப்போாணி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கே. எஸ். சதாசிவம் பிள்ளை பாட்டு 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 எம். என். நடராஜபிள்ளை புல்லாங்குழல் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### திங்கள் யூலை 19

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 நல்லையா நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம். கனகசபை பிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 நல்லையா நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6 எம். கனகசபை பிள்ளை பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 திரை இசை † 8 தஞ்சாவூர் பி. நாராயணசாமி பிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 காவடிச் சிந்து 10 டெல்லியிலுள்ளபடி செய்தி 10-30 முடிவு.




சிறுபிள்ளை வைத்தியத்திலும்
ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற
சில்லாலைமுத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்ரேட்டம், காய்ச்சல் முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரேசீராய் நடத்தும் அரசினரின் அங்கீகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.

அ. செபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.

(Q. 30. 11-5.43—10-8.43)

குறைந்த விலையில்
துணிகள்
ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 15, July, 1943.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org